05.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டெல்டாவில் கனமழை**

'வங்கக் கடலில் தொடரும் காற்றழுத்த தாழ்வு நிலையால், விழுப்புரம், கடலூர், டெல்டா மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.வானிலை ஆய்வு மையம், நேற்று முதல், டிச., 8 வரையிலான வானிலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதில், 7ம் தேதி வரை, மிக கனமழை மற்றும் கனமழை பெய்யும் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 8ம் தேதிக்கான எச்சரிக்கை இல்லை என தெரிவித்துள்ளது. எனவே, தமிழகத்தை மிரட்டி வரும் மழையின் தீவிரம், 8ம் தேதியில் இருந்து குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழகத்தை மிரட்டி வரும் கனமழை டிச., 8ல் நிற்குமா?**

சென்னை: 'வங்க கடலில் தொடரும் காற்றழுத்த தாழ்வு நிலையால், விழுப்புரம், கடலூர், டெல்டா மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். கன்னியகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது.இந்த எச்சரிக்கை 7ம் தேதி வரை மட்டும் விடப்பட்டுள்ளதால், 8ம் தேதிக்கு பிறகு மழை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இதுகுறித்து, வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று கூறியதாவது:** வங்க கடலின் தென்மேற்கே, இலங்கை அருகே, நேற்று முன்தினம் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தொடர்ந்து அப்பகுதியிலேயே

நீடிப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், டிச., 7 வரை மழை நீடிக்கும். **தேதி வாரியாக முன்னெச்சரிக்கை: டிச., 5:** விழுப்புரம், கடலுார், டெல்டா மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மிக கனமழை பெய்யும். கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். **டிச., 6, 7:** தமிழக தென் கடலோர மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். தமிழக வட கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும்.

**சென்னை:**சென்னையில், அடுத்த, 48 மணி நேரத்துக்கு, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.நேற்று காலை, 8:30 மணி வரை, தமிழகத்தில், அதிகபட்சமாக நாகப்பட்டினம், கடலுார் - 9; விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் - 5; திருவாரூர் மாவட்டம், நன்னிலம், திருத்துறைபூண்டி, தேனி மாவட்டம், பெரியாறு - 4; திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, சென்னை டி.ஜி.பி., அலுவலகம்; அரியலுார் மாவட்டம், ஜெயங்கொண்டம்; கன்னியாகுமரி மாவட்டம், குளித்துறை - 3 செ.மீ., மழை பெய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**டிச., 8ல் நிற்குமா?**

வானிலை ஆய்வு மையம், நேற்று முதல், டிச., 8 வரையிலான வானிலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதில், 7ம் தேதி வரை, மிக கனமழை மற்றும் கனமழை பெய்யும் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 8ம் தேதிக்கான எச்சரிக்கை இல்லை என தெரிவித்துள்ளது. எனவே, தமிழகத்தை மிரட்டி வரும் மழையின் தீவிரம், 8ம் தேதியில் இருந்து குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அனைத்து அணைகளும் நிரம்புகிறது : செயலர்**

சென்னை: தமிழகத்தில் உள்ள அனைத்து அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. 46 அணைகள் 100 சதவீதம் அளவிற்கு நிறைந்துள்ளது. தமிழகத்தில் அனைத்து ஏரிகளும் முழுவதுமாக நிரம்பி வருவது இதுவே முதல் முறையாகும்.சென்னையைசுற்றியுள்ள ஏரியில் இருந்து திறந்து விடப்படும்

நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. செம்பரம் பாக்கம் ஏரியில் திறந்து விடப்படும் உபரிநீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. என .பொதுப்பணித்துறை செயலர் பழனியப்பனர் தெரிவித்துள்ளார்.

**உளுந்தூர் பேட்டையில் பலத்த மழை**

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்துவருகிறது. மழையின் அளவு 4.4 ஆக பதிவாகியுள்ளது.

**பிச்சாட்டூர் அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு**

பிச்சாட்டூர்: ஆந்திர மாநிலம் பிச்சாட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் உபரி நீரின் அளவு ஆயிரத்து 500 கன அடியில் இருந்து 3, 500 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆரணி ஆற்றின் கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு மாவட்ட கலெக்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு?**

'மழை தொடர்வதால், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து, கூடுதலாக நீர் திறக்க வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. அடையாறு கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும்' என, மாநகராட்சி எச்சரித்து உள்ளது.பொதுப்பணித் துறை அதிகாரி கூறியதாவது:ஏரி முழு கொள்ளளவில் உள்ளபோது, நீர் வரத்துக்கு ஏற்ப, ஏரியின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, எப்போது வேண்டுமானாலும் கூடுதல் நீரை வெளியேற்றுவோம். ஒவ்வொரு முறையும், வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க முடியாது. தேவைக்கு ஏற்ப தண்ணீர் திறக்க, மாவட்ட நிர்வாகத்திடமும், தமிழக அரசிடமும் உரிய முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. வட கிழக்கு பருவமழை காலம் முடியும் வரையில், அந்த பகுதியில் வசிக்க, மக்கள் மீண்டும் வர வேண்டாம். இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

200 குடிநீர் தயாரிப்பு நிறுவனங்கள் மூடல்



விடாது கொட்டித்தீர்த்த மழையால், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், 200 குடிநீர் தயாரிப்பு நிறுவனங்கள் முடங்கியுள்ளன. மீதியுள்ள நிறுவனங்களில் உற்பத்தி நடந்தாலும், போக்குவரத்து துண்டிப்பால், குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

**உற்பத்தி முடங்கியது:**

சென்னை, புறநகர் பகுதிகளில் மட்டும் தினமும், 10 லட்சம் 'கேன்' குடிநீர் விற்பனை நடக்கிறது. விடாது கொட்டிய கனமழையால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால், மூன்று மாவட்டங்களில் உள்ள, 360 குடிநீர் உற்பத்தி நிறுவனங்களில், 200 நிறுவனங்களுக்குள் தண்ணீர் புகுந்து, உற்பத்தி முடங்கி உள்ளது; 160 நிறுவனங்கள் மட்டுமே செயல்படுகின்றன.இந்த நிறுவனங்களில் உற்பத்தி நடந்தாலும், அவற்றை சென்னை கொண்டு வருவதற்கான, சாலை போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டதால், 'கேன்' குடிநீரை வினியோகிக்க முடியவில்லை. இதனால், இங்கும், உற்பத்தி பெருமளவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**கடும் தட்டுப்பாடு:**

குடிநீர் உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'ஏற்கனவே வீடுகளில் வாங்கி வைத்திருந்த குடிநீர் கேன்களை வைத்து மக்கள்சமாளித்துள்ளனர். இதுவரை

சமாளித்ததே அதிகம்; இன்னும், ஓரிரு நாட்கள் மழை தொடர்ந்தால், 'கேன்' குடிநீர் கிடைக்காமல், கடும் தட்டுப்பாடு ஏற்படும்' என்றனர். பல பகுதிகளில், ஒரு, 'கேன்', 50 ரூபாய் வரை விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. **'குடிநீர் பாக்கெட் மூட்டை இலவசமாக தருகிறோம்': தமிழ்நாடு கிரேட்டர் சென்னை குடிநீர் உற்பத்தியாளர் சங்க நிர்வாகி முரளி கூறுகையில்,** "வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகளுக்கு தேவையான குடிநீர் பாக்கெட்களை, எவ்வளவு கேட்டாலும் இலவசமாக தர தயாராக உள்ளோம்; வாகனங்களுடன் வந்து எங்களிடம் பெற்றுச் செல்லலாம்," என்றார். குடிநீர் பாக்கெட் தேவைக்கு, ஷேக்ஸ்பியர் - 98848 83232, விக்ரம் - 95000 09479; ஆறுமுகக்கனி - 93617 7777 ஆகியோரது எண்களை தொடர்பு கொள்ளலாம்.

**அத்தியாவசிய பொருட்களை கப்பலில் கொண்டு வரலாம்!**



அத்தியாவசிய பொருட்களைகப்பலில் கொண்டு வரலாம்!சென்னையில், சாலை மற்றும் ரயில் வழியாக சரக்கு போக்குவரத்து குன்றியுள்ள நிலை உள்ளதால், மளிகை பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

மீண்டும் இப்பொருட்கள் எப்போது இயல்பாக கிடைக்கும் என்பது தெரியாததால், மக்களும் தாங்கள் வழக்கமாக வாங்கும் அளவை விட, அதிகமாக பொருட்களை வாங்கி வருகின்றனர். பலசரக்கு கடைகளில்

பொருட்கள் வேகமாக காலியாகி வருவதால், சாதாரண உணவு பொருட்களின் விலை கண்டபடி உயர்ந்துள்ளதாகவும், பல பொருட்களுக்கு செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு உள்ளதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த சூழலில், தூத்துக்குடி, விசாகப்பட்டினம் மற்றும் கொழும்பு துறைமுகங்களில் இருந்து, காய்கறிகள், அரிசி, பருப்பு, டீசல், பெட்ரோல், சமையல் காஸ் சிலிண்டர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை தமிழக அரசு, சென்னை துறைமுகம் வாயிலாக, நகர சந்தைகளுக்கு வினியோகம் செய்ய முயற்சிக்கலாம். இதன் மூலம், ஏற்கனவே வெள்ளத்தால் பல பொருளாதார இழப்புகளை சந்தித்துள்ள சென்னை மக்களின் சேமிப்பு அத்தியாவசிய பொருட்கள் வீணாகாமல் தடுக்கலாம். தமிழக அரசு பரிசீலிக்குமா?

**வரத்து குறைவு: பறக்குது காய்கறி விலை: 4 நாட்கள் வரை இதே நிலை தான்**



வரத்து குறைவாக உள்ளதால், பெரும்பாலான காய்கறிகளின் விலை, 1 கிலோ, 100 ரூபாய் வரை சென்றுள்ளது. 10 ரூபாய் விலை கொண்ட சுரைக்காய், 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 'மழை விட்டால், நான்கு நாட்களில் இயல்பு நிலைக்கு வரும்' என, வியாபாரிகள் கூறினர். இடைவிடாது கொட்டித்தீர்த்த மழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஆந்திராவையும் மழை விட்டு வைக்காததால், தமிழகத்திற்கான காய்கறி வரத்து குறைந்துள்ளது. வழக்கமாக, கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தினமும், 300 லாரிகளில் காய்கறி

வரும். ஒரு வாரமாக, 100 லாரிகள் கூட வரவில்லை. நேற்று, 110 லோடுகளில் காய்கறி வந்தது. இரண்டு நாட்களாக காய்கறி வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டவில்லை. நேற்று மழை சற்று விட்டதால், வியாபாரிகள் குவிந்தனர்; இதனால், காய்கறி விலை எகிறியது. நேற்று, 1 கிலோ அவரை - 120, பீன்ஸ் - 110, முருங்கை - 110, கத்தரி, வெண்டை - 60; பட்டாணி - 180, புடலை - 70, பீர்க்கங்காய், தக்காளி, வெங்காயம் - 60; பீட்ரூட் - 40, உருளை - 35 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.

பத்து ரூபாய்க்கு விற்ற சுரைக்காய் - 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. புதினா, கொத்தமல்லி சிறு கட்டு, 25 ரூபாய், கருவேப்பிலை சிறு கட்டு, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**இதுகுறித்து, கோயம்பேடு காய்கறி மார்க்கெட் ஆலோசகர் சவுந்தரராஜன் கூறுகையில்** ,"பெரும்பாலான காய்கறிகளின் விலை, 1 கிலோ, 100 ரூபாய் வரை சென்றுள்ளது. வரத்து குறைவாக உள்ளது. மழை விட்டால், நான்கு நாட்களில் இயல்பு நிலை ஏற்படும்; விலை கட்டுக்குள் வரும். மழை விடுமா என்று தெரியவில்லை; மழை தொடர்ந்தால், மேலும் விலை உயர்வது தவிர்க்க முடியாது," என்றார்.

### யாழ்ப்பாணம் தேங்காய் விளைச்சல் சூப்பர்: தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

கீழக்கரை:கீழக்கரை சுற்றுவட்டாரப் பகுதிகளில் யாழ்ப்பாணம் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. நல்ல விலை கிடைப்பதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கீழக்கரை, காஞ்சிஞ்சிரங்குடி, திருப்புல்லாணி, சேதுக்கரை, முத்துப்பேட்டை, பெரியபட்டினம், வண்ணாங்குண்டு, தினைக்குளம் உள்ளிட்ட கடலோரக் கிராமங்களில் அதிகளவு தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புகளில் இலங்கை யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தென்னை மரங்கள் அதிகமாக உள்ளன. யாழ்ப்பாணம் தென்னை மரங்களில் காய்ப்புத்திறன் அதிகம் மட்டுமின்றி தேங்காய்கள் பெரிசாகவும், எண்ணெய் சத்து நிறைந்ததாகவும் உள்ளது. இதனால் ராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்தி

செய்யப்படும் யாழ்ப்பாணம் தேங்காய்க்கு உள்ளூர் மட்டுமின்றி வெளிமாவட்டங்களிலும் அதிக மவுசு உள்ளது. வியாபாரிகள் போட்டி போட்டு தேங்காய்களை கொள்முதல் செய்கின்றனர். உள்ளூர் தேங்காய்கள் கிலோ ரூ.20 என்றால் யாழ்ப்பாணம் தேங்காய் கிலோ ரூ.25 க்கு விற்பனையாகிறது.

பருவமழை தொடர்ந்து பெய்துவருவதால் யாழ்ப்பாணம் தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேங்காய் வியாபாரி செல்வம் கூறுகையில்,"" கீழக்கரை சுற்றுவட்டாரப் பகுதிகளில் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளதால் வழக்கத்தை விட அதிகமாக விற்பனைக்கு வருகிறது.

யாழ்ப்பாணம் தேங்காய்க்கு ஈரோடு, காங்கேயம், வெள்ளக்கோயில், விருதுநகர், மதுரை உள்ளிட்ட பகுதிகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் இதர தேங்காய்களை விட யாழ்ப்பாணம் தேங்காய் விலை சற்று அதிகம்." என்றார்.

**மாவட்டத்தில் காய்கறி விலை குறைந்தது சென்னையில் மழை தொடர்வதால்**

பொள்ளாச்சி: சென்னையில் தொடரும் பலத்த மழை காரணமாக, கோவை மாவட்டத்தில் விளையும் காய்கறிகளின் விலை, கணிசமாக குறைந்துள்ளது.

கோவை மாவட்டத்தில் தென்னைகளுக்கு அடுத்தபடியாக, காய்கறிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக, பொதுமக்களின் வரவேற்புக்கு ஏற்ற நேரங்களில், விலை கிடைப்பதால் தக்காளி சாகுபடி மாவட்டம் முழுவதும் பல ஆயிரம் ஏக்கரில் நடக்கிறது.

குறிப்பாக, கிணத்துக்கடவு, தொண்டாமுத்துார், பொள்ளாச்சி பகுதிகளில் சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது. இதேபோல, மானாவாரி நிலங்களில் தட்டைப்பயிறும், பொரியல் தட்டையும் அதிகளவில் சாகுபடியாகிறது.

சொட்டு நீர் பாசனத்தில் பந்தல் காய்கறிகள் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதற்காக பந்தல் காய்கறி உற்பத்தியாளர் சங்கமே நடக்கிறது. கடந்த ஒரு மாதமாக வடகிழக்கு பருவமழையின் தாக்கம் தமிழகம் முழுவதும் நீடித்து

வருகிறது.குறிப்பாக, சென்னை, கடலூார், செங்கல்பட்டு மாவட்டங்களில் மழையின் கோரதாண்டவம் மக்களின் வாழ்வாதாரத்தை பதைபதைக்க வைத்துள்ளது. இம்மழை இனியும் தொடரும் என்பதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், கோவை மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் கோவை, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், சுந்தராபுரம், நாச்சிபாளையம், கிணத்துக்கடவு மார்க்கெட்களில் விற்பனை செய்யப்படுகிறது.

இங்கு கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் கோவை மட்டுமல்லாது மதுரை, சென்னை மற்றும் கேரளாவுக்கும் அனுப்பப்படுகிறது.தற்போது சென்னையில் அடைமழையுடன், வாகன போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளதால் காய்கறிகள் அனுப்பப்படுவதில்லை. இதனால் உள்ளூர் வியாபாரிகளே எடுத்து விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

போட்டிகள் குறைந்து போனதால், காய்கறிகளின் விலை வெகுவாக குறைந்துவிட்டது. ஆனாலும், பொள்ளாச்சியில் இருந்து காய்கறிகள் சென்னைக்கு அனுப்பப்படுவதில்லை. மாறாக, இங்கிருந்து கேரளாவுக்கு தான் அனுப்பப்படுகிறது.இருந்தும், மார்க்கெட்டில் கடந்த வாரத்தை காட்டிலும் தக்காளி, 50 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி, 14 கிலோ எடையுள்ள ஒரு கூடை தக்காளி, தற்போது அதிகப்பட்சமாக, 350 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரம் இது 400 ரூபாய்க்கு விற்றது. இதேபோல, வெண்டைக்காய், 40 ரூபாயில் இருந்து 27 ரூபாய்க்கும் புடலை, 30 ரூபாயில் இருந்து 25 ரூபாய்க்கும், பாகல், 35 ரூபாயில் இருந்து 30 ரூபாய்க்கும் நேற்று விற்பனையானது. அடுத்து வரும் நாட்களில் இதே விலை நீட்டிக்கும் அல்லது தொடர்ந்து இறங்குமுகத்தில் இருக்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாய நிலங்களை வகை மாற்றம் செய்ய ஆட்சேபனை! நகராட்சி நகரமைப்பு துறையினர் திடீர் 'செக்'

ஊட்டி: ஊட்டி நகராட்சிப் பகுதியில் விவசாய நிலங்களை, குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாட்டு நிலங்களாக வகை மாற்றம் செய்ய, நகராட்சி நகரமைப்பு துறை, ஆட்சேபனை தெரிவித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் நகர, கிராமப்புறங்களில் உள்ள நிலங்களில், தேயிலை மற்றும் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.விளை பொருட்களின், விலை வீழ்ச்சி காரணமாகவும், விவசாயத்தை மேற்கொள்ள தங்கள் வாரிசுகள் முன் வராததாலும், விவசாய நிலங்களை பலர் விற்பனை செய்து வருகின்றனர்.

வகை மாற்றம்  பிற மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த செல்வந்தர்கள், தொழிலதிபர்கள் பலர், விவசாய நிலங்களை வாங்கி, அவற்றை, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம், நில வகை மாற்றம் செய்து கொள்கின்றனர். அதன்படி, 'பிஆர்' எனப்படும் 'ஆரம்ப குடியிருப்புப் பகுதி', 'மல்டி யூஸ்டு' எனப்படும், 'பல்நோக்கு பயன்பாட்டு பகுதி' என, இரு வகையாக நில வகை மாற்றம் செய்யப்படுகிறது. வகை மாற்றம் செய்யப்பட்ட 'பிஆர்' பகுதிகளில் குடியிருப்புகளும், 'மல்டி யூஸ்டு' பகுதிகளில், பங்களா, காட்டேஜ், ரிசார்ட்டுகளும் கட்டப்படுகின்றன. குவியும் விண்ணப்பங்கள்

இந்நிலையில், ஊட்டி நகராட்சிப் பகுதியிலும், சில இடங்களில் விவசாய நிலங்கள் உள்ளன. அந்த இடங்களில், காட்டேஜ், ரிசார்ட் கட்டி வணிகமயமாக்கும் நோக்கில், நில வகை மாற்றம் செய்ய, மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நிலவகை மாற்ற அனுமதியை நகராட்சி நிர்வாகம் வழங்க வேண்டும் என்ற நிலையில், கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 30 பேர், நில வகை மாற்றம் கோரி விண்ணப்பம் வழங்கியுள்ளனர். மொத்தமாக, 10 ஏக்கர் விவசாய நிலங்கள், வணிக பயன்பாட்டு நிலங்களாக மாறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

நகராட்சி அதிரடி நில வகை மாற்றத்திற்கு அனுமதியளித்து வந்த நகராட்சி நிர்வாகம், தற்போது, நில வகை மாற்றத்திற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது. நகராட்சி கமிஷனர் சர்தாரிடம் கேட்ட போது,“நில வகை மாற்றத்துக்கு, நகரமைப்பு பிரிவினர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இதற்கான காரணங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம்,” என்றார். நகரமைப்பு ஆய்வாளர் அறிவுடை

நம்பியிடம் கேட்ட போது,“நகரில், ஏற்கனவே, விவசாய நிலங்கள் குறைவாக உள்ளது என்பதாலும், நகரின் பசுமையை பாதுகாக்கும் நோக்கிலும், விவசாய நிலங்களை குடியிருப்பு, பல்நோக்கு பகுதியாக நில வகை மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது,” என்றார்.

**இரண்டு நாட்களாக பால் கிடைக்கவில்லை**

வெள்ளம் புகுந்ததால், எங்கள் வீடுகள் மூழ்கின. வெள்ளம் வடிந்த பகுதிகளில் மின் வசதி சீராகி வருகிறது. கொசப்பூர் - செட்டிமேடு சாலை, மாத்துார் பைபாஸ் - கொசப்பூர் இணைப்பு சாலை வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்துள்ளன. அவசர போக்குவரத்திற்கு நாங்கள், 7 கி.மீ., துாரம் மாற்றுப்பாதையை பயன்படுத்தி செங்குன்றத்திற்கு சென்று வருகிறோம். நேற்று முதல் தான் எங்களால் வெளியில் வர முடிகிறது. கடந்த இரண்டு நாட்களாக பால் கிடைக்கவில்லை. இங்கு ஓரிரு கடைகள் மட்டும் திறந்திருந்தாலும், தேவையான காய்கறி உணவு பொருட்கள் கிடைக்கவில்லை.பி.அரிகிருஷ்ணன், 49, தனியார் நிறுவனம், கொசப்பூர், வடபெரும்பாக்கம்.

**வீடுகளை விட்டு வெளியேறவும் முடியவில்லை.**

எங்கள் வீடுகளை சூழ்ந்த வெள்ளநீர் வடிய இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகும். மூன்று நாட்களாக மின்சாரம் இல்லை; வீடுகளை விட்டு வெளியேறவும் முடியவில்லை. எங்கள் பகுதியில் உள்ள, 150 முதல் 200 பேருக்கு, கொளத்துார் தவ்கீத் ஜமாத் சார்பில் உணவு, ரொட்டி, குடிநீர் தொடர்ந்து வழங்கப்படுகிறது. போக்குவரத்து வசதியின்றி பால் கிடைக்கவில்லை. கடைகள் மூடியிருப்பதால், காய்கறி உள்ளிட்ட பொருட்கள் வாங்க முடியவில்லை. தேங்கிய வெள்ளநீரை அகற்ற மாநகராட்சி விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். வி.யூனுஸ்கான், 48, தனியார் நிறுவன ஊழியர், தணிகாசலம் நகர், 'இ' பிளாக், மாதவரம்.

## மின் கம்பங்கள் சேதம்:தொடர்கிறது மின் தடை



குன்றத்துார்:செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து, 35 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டது. கரையை ஒட்டிய பகுதிகளில், க0க்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன. துணை மின்நிலையங்களும் வெள்ளத்தில் மூழ்கின.சிறுகளத்துார், திருமுடிவாக்கம், அமரம்பேடு, நடுவீரப்பட்டு, சோமங்கலம் என, 10க்கும் மேற்பட்ட பகுதியில், மின்வினியோம் நிறுத்தப்பட்டு உள்ளது.அலைபேசி இயக்க முடியாததுடன், குளிக்க, துணி துவைக்க முடியாமல், பல்வேறு சிரமங்களை பகுதிவாசிகள் சந்திக்கின்றனர்.மின்கம்பங்களை சரி செய்த பின்தான் மின்வினியோகம் சீராகும்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் முழுமையாக நிரம்பிய 1,020 ஏரிகள்

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில், கடந்த, 20 நாட்களுக்கும் மேலாக மழை நீடிக்கிறது. மழையால் மாவட்டம் முழுவதும், 4,458 வீடுகள் சேதமடைந்துள்ளன. 6 பேர் இறந்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித்தறை நிர்வாகத்தின் கீழ் உள்ள, 600 பெரிய ஏரிகளில், 407 ஏரிகளும், ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள, 1,256 ஏரிகளில், 613 ஏரிகளும் முழுமையாக நிரம்பியிருக்கிறது. இவற்றில், 37 ஏரிகள் உடைப்பு

ஏற்பட்டு தற்காலிகமாக மணல் போட்டு சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆரணி, சேத்துப்பட்டு, வந்தவாசி, வெம்பாக்கம், உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, 16 ஏரிகள் ஆபத்தான நிலையில் உள்ளன. எனவே இந்த ஏரிகள் அனைத்தும் பொதுப்பணித்துறை அதிகாரிகளால், 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நீர்கசிவு, உடைப்பு ஏற்பட்டால் அவற்றை அடைப்பதற்காக மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைத்திருப்பதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
மேலும் வந்தவாசி, ஆரணி சேத்துப்பட்டு, செய்யாறு, ஆகிய பகுதிகளில், 23 இடங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**சாத்தனூர் அணை உபரி நீர் மூலம் 7 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பு**

திருவண்ணாமலை: சாத்தனூர் அணை உபரி நீர் மூலம், தினமும், 7 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவ மழையால், தென்பெண்ணை ஆற்றில் தொடர்ந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், சாத்தனூர் அணைக்கு நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் மொத்த உயரமான, 119 அடியில், 117.35 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வரும் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நீர் வரத்து முழுமையாக அணைக்கு அனுமதித்தால் ஒரு சில மணி நேரத்தில் நிரம்பிவிடும். தற்போது வினாடிக்கு, 2,827 மில்லியன் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது, இதில், 2,445 மில்லியன் கன அடிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வெளியேற்றப்படும் உபரி நீர் மூலம், தினமும், 7 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. குப்பனத்தம் அணையின் நீர் மட்டம், 57 அடி, மிருகண்டா நதி அணை நீர்மட்டம் 20.83 அடியாகவும், செண்பகத்தோப்பு அணை நீர் மட்டம், 48.05 அடியாகவும் உயர்ந்துள்ளது. அணைகள் தேவையான முழு கொள்ளளவை எட்டியிருப்பதால், அணைக்கு வரும் தண்ணீர் முழுமையாக வெளியேற்றப்படுகிறது.

**வேலூர் அணைகள், ஏரிகளில் இருந்து 20 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றம்ச**

வேலூர்: வேலூர் மாவட்ட அணைகள், ஏரிகளில் இருந்து தினமும் வெளியேற்றப்படும், 20 ஆயிரம் கன அடி நீர் யாருக்கும் பயன்படாமல் கடலில் கலக்கிறது. வேலூர் மாவட்டத்தில், பெய்த தொடர் மழை காரணமாக, மோர்த்தானா அணையில், 879 கனஅடி நீர், ராஜா தோப்பு அணையில், 135, ஆண்டியப்பனூர் அணையில், 112 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ஆற்காடு, புதுப்பாடி அருகே உள்ள பாலாற்று அணைக்கட்டுக்கு 11 ஆயிரத்து 867 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. இதில், 11 ஆயிரத்து 663 கனஅடி நீர் ஆற்றில் திறந்து விடப்படுகிறது. பொன்னை அணைக்கு, 5,374 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. இந்த நீர் முழுமையாக பொன்னையாற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. 100 மில்லியன் கன அடிக்கு அதிகமான கொள்ளளவு கொண்ட, 8 ஏரிகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. காவேரிப்பாக்கம் ஏரி,30.60 அடி உயரம் கொண்டது. இதில், 29.60 அடி உயரம் நீர் உள்ளது. பாதுகாப்பு கருதி ஏரிக்கு வரும்,160 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் கலவை ஏரியில் இருந்து,100, மகேந்திரவாடி ஏரியில் இருந்து,240, சோளிங்கர் ஏரியில் இருந்து,627, மூதூர் ஏரியில் இருந்து,750, பூண்டி ஏரியில் இருந்து,57, வெள்ளூர் ஏரியில் இருந்து,575 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள அணை, ஏரிகளில் இருந்து தினமும்,19 ஆயிரத்து975 கனஅடி நீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் பாலாற்று வழியாக சென்னைக்கு அருகே வங்கக்கடலில் யாருக்கும் பயன்படாமல் கலக்கிறது. பாலாற்றில் தடுப்பணைகள் கட்டி தண்ணீரை சேமிக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

### **கள்ளக்குறிச்சியில் தொடர் மழை 186 ஏரிகள் நிரம்பியது**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால், 186 ஏரிகள் முழுவதும் நிரம்பின. கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை உட்@காட்டத்திற்குட்பட்டு கோமுகி, மணிமுக்தா அணைகள், 213 ஏரிகள் மற்றும் @காமுகி, மணிமுக்தா, கெடிலம் ஆகிய மூன்று ஆறுகள் உள்ளன. மேலும், 72 அணைகட்டுகள் உள்ளன. இரு அணைகள் மற்றும் ஏரி

பாŒனத்தை நம்பி, 45 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான விளை நிலங்கள் உள்ளன. கடந்த சில நாட்களாக பெய்து வரும் வடக்கிழக்கு பருவ மழை காரணமாக கோமுகி, மணிமுக்தா அணைகள் நிரம்பி, ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. கோமுகி ஆற்றிலுள்ள 11 தடுப்பணைகள், மணிமுக்தா ஆற்றிலுள்ள 4 தடுப்பணைகளிலும் தண்ணீர் நிரம்பி வழிந்தோடுகிறது. இதனால் சுற்று வட்டார பகுதிகளிலுள்ள ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை உட்கோட்டத்திற்குட்பட்டு மொத்தம் 213 ஏரிகள் அமைந்துள் ளன. இதில் 129 ஏரிகள் முழுவதும், 39 ஏரிகள் 75 சதவீதமும், 5 ஏரிகள் 50 சதவீதமும், 40 ஏரிகள் 25 சதவீதமும் தண்ணீர் நிரம்பியுள்ளது. மேலும், ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்து நிரம்பி வருவதால், கிணறுகளிலும் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இதேபோல் கள்ளக்குறிச்சி கோட்டத்தில் கிராம பஞ்சாயத்திற்குட்பட்டு, கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் 29 ஏரிகள், தியாகதுருகம்-45, சங்கராபுரம்-32 , சின்னசேலம்- 34 ஏரிகள் என மொத்தம் 140 ஏரிகள் அமைந்துள்ளன. இதில் 57 ஏரிகள் முழுவதும் நிரம்பியுள்ளன. மற்ற ஏரிகள் 25 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை நிரம்பியுள்ளது.

## நெற்பயிரில் சுருட்டுப்புழு, புகையான் பூச்சி தாக்குதல்

திண்டுக்கல்:மழைக்காலத்தில் நெற்பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார் ஆலோசனை கூறியுள்ளார். தற்போது பருவநிலை மாற்றம், வட கிழக்கு பருவமழை மற்றும் பனிமூட்டத்துடன் மழை பெய்து வருகிறது. இதனால் பூச்சி மற்றும் நோய்கள் நெற்பயிரை தாக்கி சேதம் விளைவிக்கும். இதனை தடுப்பது குறித்து இணைஇயக்குனர் கூறியதாவது: தற்போது நெல்லில் இலைச் சுருட்டுப்புழு தாக்குதல் இருக்கும். இளம் பயிர்கள் மற்றும் தூர் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை தாக்கும் இப்புழுக்கள், இலைகளை உள்பக்கமாக சுருட்டி பச்சையத்தை சுரண்டி உண்ணும். இலைகள் வெள்ளை நிற சுரண்டலுடன் காணப்படும். தாக்குதல் அதிகமானால் செடிகள் காய்ந்து விடும்.

இதற்கு தழைச்சத்து இடுவதை குறைக்க வேண்டும். இப்புழுவின் அந்தி பூச்சிகளின் நடமாட்டம் அறிந்து விளக்கு பொறி வைத்து அழிக்கலாம். தாவர பூச்சிக் கொல்லியான "அசாடிரக்டீன்' கரைசலை தெளிக்கலாம்.

புகையான் பூச்சி: குளோர்பைரிவால் மருந்தை உபயோகிப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம். வயலில் அதிக நீர் தேங்கி வெளியேற முடியாமல் உள்ள இடங்களில் புகையான் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். நெல்லின் தண்டு பகுதியில் கூட்டமாக அமர்ந்து சாறு உறிஞ்சும் இந்த

இதற்கு தழைச்சத்து உரங்களை இட வேண்டும். செயற்கை பைத்திராய்டு மற்றும் பூச்சிகளின் மறு உற்பத்தியை தூண்டும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த கூடாது. வேப்ப எண்ணெய் கரைசலை சோப்பு கரைசலுடன் கலந்த தெளிக்க வேண்டும், என்றார்.

**உணவு தொழில் பயிற்சி**

காரைக்குடி;செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையம், கோவை வேளாண் பல்கலை இணைந்து நடத்தும் உணவு தொழில் முனைவோருக்கான கருத்தரங்கம் செட்டிநாட்டில் வரும் 10ம் தேதி நடக்கிறது. இதில் உணவு தொழில் நுட்பங்கள், உணவு தர கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு, உணவு தொழில் தொடங்க அரசின் உதவிகள், கடன் பெறுவது, உணவு பொருட்களை சந்தை படுத்துதல் குறித்த ஆலோசனை வழங்கப்படுகிறது. பங்கேற்க விரும்புவோர் 04565 283 080, 94429 20853 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**கனமழையால் பாசிபயிறு, உளுந்தில் மஞ்சள் நோய்**

சாத்தூர்:சாத்தூர் என்.மேட்டுப்பட்டி, மாயூர்நாதபுரம் உள்ளிட்ட கிராமங்களில் உளுந்து, பாசிபயிறுகளில் கன மழையால் மஞ்சள் நோய் தாக்கியதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து உள்ளனர். ஆவணி, புரட்டாசி மாதங்களில் பயிறு வகைகளை விவசாயிகள் பயிர் செய்வது வழக்கம்.

பயிறுவகைகள் இந்த ஆண்டு நன்றாக இருக்கும் என விவசாயத்துறையினர் தெரிவித்ததை தொடர்ந்து என்.மேட்டுப்பட்டி, மாயூர்நாதபுரம், கோட்டூர், பாப்பாகுடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் உளுந்து, பாசிப்பயிறு விதைகளை வாங்கி பயிரிட்டனர்.

ஆடி மாதத்தில் விதைகள் வாங்கி நட்ட விவசாயிகள் காய்கள் பறித்து விட்ட நிலையில் புரட்டாசி மாதம் விதைநட்டவர்கள் தற்போது பெய்த கனமழையால் பயிர்களில் மஞ்சள்நோய் பரவி காய்கள் பிடிக்காமல் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை நஷ்ட ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

என்.மேட்டுப்பட்டி விவசாயிகள் சங்கத்தலைவர் பி.டி.ஏ. ராஜ், ,""விவசாயத்துறையினர் இந்த ஆண்டு உளுந்து, பாசிப்பயிறுகள் நல்ல விளைச்சல் தரும் என கூறியதோடு அரசு மானியவிலையில் விதைகள் தருவதாக கூறியதை நம்பி கிலோ 40 விலையில் பாசிப்பயிறு, உளுந்து விதைகளை வாங்கி 20 ஏக்கரில் நடவு செய்துள்ளேன். தொடர் கனமழைகாரணமாக பயிர்களில் மஞ்சள்நோய் பரவி செடிகளில் காய்க்கள் பிடிக்கவில்லை. ஏக்கருக்கு 15 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது,"என்றார்.

சங்கர்ராஜ்,"" மொத்த உழைப்பும் வீணாகிவிட்டது. செடிகள் நன்றாக வளர்ந்துள்ளது ஆனால் வெயில் இல்லாமல் தொடர்ந்து மழை பெய்ததால் மஞ்சள் நோய் பரவி செடிகள் எதற்கும் பயன்படாமல் போனது.

அறுவடை செய்த பயிர்களிலும் காய்கள் பிடிக்காமல் சோடையாக உள்ளது. என்னை போல் பல விவசாயிகள் மன உளைச்சலில் உள்ளனர்,"என்றார்.

## கன மழை கொட்டியும் நிரம்பாத கண்மாய்கள்:விரக்தியில் அருப்புக்கோட்டை விவசாயிகள்

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை பகுதிகளில் கன மழை பெய்தும் கண்மாய்கள் நிறையவில்லை என, விவசாயிகள்விரக்தியில் உள்ளனர்.அருப்புக்கோட்டையில் பொது பணித்துறை கண்மாய்கள், ஒன்றிய கண்மாய்கள், ஊராட்சி கண்மாய்கள், வனத்துறையின் கீழ் ஒதுக்கப்பட்ட

கண்மாய்கள் என சிறிதும், பெரியதுமாக 140 க்கு மேற்பட்ட கண்மாய்கள் மற்றும் ஊரணிகள் உள்ளன. தற்போது தமிழகத்தில் கனமழை பெய்து வரும் நிலையில் அருப்புக்கோட்டை பகுதியிலும் அவ்வப்போது கன மழையும் பெய்தது.

பராமரிப்பு இல்லை: ஆனால் அருப்புக்கோட்டை ஒன்றியத்தை சேர்ந்த மேட்டு தொட்டியன்குளம், செம்பட்டி, குறிஞ்சாக்குளம், பந்தல்குடி, கட்டங்குடி உட்பட கிராமங்களில் உள்ள கண்மாய்களில் ஒருசிலவற்றை தவிர மற்ற கண்மாய்களில் தண்ணீர் இன்றி வறண்டு உள்ளது. கண்மாய்களை முறையாக பராமரிப்பு செய்யாமல் விட்டதே மழை நீர் தேங்காததற்கு காரணம். மேலும், கண்மாய்களில் உள்ள நீர் வரத்து கால்வாய்கள் அடைபட்டும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும் உள்ளது.

குடிநீர் ஆதாரம் :கண்மாய்களை ஆழப்படுத்தவும் தவறி விட்டனர். சீமை கருவேல மரங்களும், ஆகாயத்தாமரை வளர்ந்துள்ளன. இவற்றை அப்புறப்படுத்துவதில் அரசு மெத்தனம் காட்டி வருகிறது. இதனால் பெய்த மழை நீர் கண்மாய்களில் சேராமல் வீணாகி விட்டது. குடிநீர் ஆதாரமும், விவசாயமும் கடுமையாக பாதிப்பு அடைந்துள்ளது. மழையை நம்பி காத்திருந்த விவசாயிகள் மழை பெய்தும் கண்மாய்களில் நீர் இல்லை என்ற விரக்தியில் உள்ளனர்.

மேட்டுதொட்டியன்குளம் விவசாயி ஆழ்பாடி, ""எங்கள் ஊர் கண்மாயில் நீர் வந்து 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. தற்போது பெய்துள்ள கன மழையில் கண்மாய் நிறைந்துவிடும் என காத்திருந்தோம். ஆனால் கால்வாய்கள் நீர்வரத்து சரி இல்லாமல் போனதால் கண்மாய்களில் தண்ணீர் சேரவில்லை. இந்த கண்மாயில் நீர் நிறைந்து மறுகால் போனாதால் தான் அடுத்தடுத்து உள்ள கண்மாய்களில் நீர் நிறையும்,''என்றார்.

மேட்டுதொட்டியான்குளம் அனந்தன்,""கண்மாய்களுக்கு நீர் வரும் ஓடைகளை முன் கூட்டியே தூர் வாரி இருக்க வேண்டும். மழை பெய்தும் பயன் இல்லாமல் போய் விட்டது. குடிநீருக்கும், விவசாயம் செய்யவும் மீண்டும் கஷ்டப்பட

வேண்டியது தான் .கண்மாய்களை தூர் வாரவும், நீர்வரத்து கால்வாய்களை சரி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இப்பகுதி விவசாயிகளின் வேண்டுகோளாக உள்ளது,"என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**தொடர் மழையால் அரூர் கோட்ட வனப்பகுதியில் விதைகள் தூவும் பணி தீவிரம்**



அரூர்,

தொடர் மழையால் அரூர் கோட்ட வனப்பகுதியில் சந்தன, வேம்பு உள்ளிட்ட விதைகள் தூவும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>தொடர் மழை</u>

வடகிழக்கு பருவமழை தமிழகம் முழுவதும் பரவலாக பெய்துள்ளதையடுத்து சந்தன மரங்கள் வளர்ப்பை அதிகரிக்கும் வகையில் வனப்பகுதியில் சந்தன விதைகளை தூவ வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்பேரில் வனத்துறையினர் தமிழகம் முழுவதும் வனப்பகுதிகளில் சந்தன மரம், வேம்பு உள்ளிட்ட மர விதைகளை தூவ முடிவு செய்துள்ளது. அதன் ஒரு பகுதியாக

சந்தன மரங்களின் வளர்ச்சிக்கு உகந்த மண், காலநிலை போன்றவை அரூர் அருகே சித்தேரி, கோட்டப்பட்டி, தீர்த்தமலை உள்ளிட்ட மலைப்பகுதியில் அதிக அளவில் உள்ளது. இதனால் இந்த பகுதியில் சந்தன மர, சீத்தா, வேம்பு விதைகளை தூவ வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டனர். மேலும் சந்தனமர விதை, சீத்தா விதை, வேம்பு விதை ஆகியவற்றை சாணி கரைசல், ஜிப்ரல்லிக் ஆசிட் ஆகியவற்றை 24 மணி நேரமும் உலரவைக்கவும், பாதுகாக்கவும், நடவடிக்கை மேற்கொண்டனர்.

<u>விதைகள் தூவும் பணி</u>

இந்த விதைகளை நேரிடையாக மண் மற்றும் சாணத்துடன் கலந்து உருண்டையாக பிடித்து உலரவைக்கும் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தர்மபுரி மண்டல வனப்பாதுகாவலர் உலகநாதன், அரூர் மாவட்ட வன அலுவலர் ராமசுப்பிரமணியன் ஆகியோரின் அறிவுரையின்படி மொரப்பூர் வனச்சரக அலுவலர் ஆறுமுகம் முன்னிலையில் வனவர்கள் அரூர் வன கோட்டத்திற்குட்பட்ட சித்தேரி, அரூர், கோட்டப்பட்டி, தீர்த்தமலை வனப்பகுதிகளில் சந்தன, வேம்பு உள்ளிட்ட விதைகள் தூவும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த விதைகளை உலரவைக்கும் பணிகளை கண்காணிக்கவும், விதைகள் மற்றும் மண், சாண உருண்டைகளை பாதுகாக்கவும் தோட்டக்காவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் 24 மணி நேரமும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மக்காச்சோள ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகள் - வேளாண் துறையினர் சந்திப்பு**

பழனியை அடுத்த வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகள், வேளாண் துறையினரின் கூட்டு சந்திப்பு புதன்கிழமை நடைபெற்றது.

பழனி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள், வேளாண்மை துறையினர் பங்கேற்றனர்.

கூட்டு சந்திப்பு நிகழ்ச்சியில் பழனி வேளாண்மை உதவி இயக்குநர் சுருளியப்பன் பங்கேற்று விவசாயிகள்- விஞ்ஞானிகள் கலந்துரையாடலை தொடங்கிவைத்தார். மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய தலைவர் சேதுராமன் நெற்பயிரில் குலைநோய், தென்னையில் சிவப்புக்கூண் வண்டு, மக்காச்சோள பயிரில் வாடல்நோய், அடிச்சாம்பல் நோய் மற்றும் பல்வேறு முக்கிய நோய்கள் குறித்தும், அவற்றை நீக்குவது குறித்தும் விளக்கமளித்தார். மரபியல் பேராசிரியர் வினோதினி, மக்காச்சோளத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கலப்பின ரகங்கள், செயல்விளக்கப் பாத்திகள் குறித்து விளக்கினார். பாசிப்பயறில் புதிய ரகம் கோ8 மகசூல் திறன் குறித்தும் விளக்கப்பட்டது.

இதையடுத்து ஆராய்ச்சி நிலையத்தில் களைகளை உண்டு உருவான மண்புழு உரக்கூடத்தை விவசாயிகள் பார்வையிட்டனர். மண்ணியல், உழவியல், பூச்சியியல் துறைகளின் விஞ்ஞானிகளுடனும் விவசாயிகள் கலந்துரையாடி விளக்கங்களை கேட்டறிந்தனர். அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மணிகண்டராஜா, ஜெகநாதன் உள்ளிட்டோர் சந்திப்புகான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கோசல்நாத் நன்றி கூறினார்.

**கம்பு விளைச்சல் அதிகரிப்பு: ஆத்தூர் விவசாயிகள் மகிழ்ச்சி**

ஆத்தூர் பகுதியில் கம்பு விளைச்சல் அதிகரித்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வேடந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சிறுதானிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

பாசனத்திற்கு அதிக நீர் தேவையில்லை என்பதால், சிறுதானிய பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
அதிகபட்சமாக மக்காச்சோளம் 38 ஹெக்டேரிலும், சோளம் 20ஆயிரம் ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக சுமார் 800 ஹெக்டேரில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. இதர சிறுதானியங்களான கேழ்வரகு, திணை, சாமை, குதிரைவாலி ஆகியவை குறைந்த அளவில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளன.
ஆத்தூர்,ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கம்பு இப்போது அறுவடைக்கு தயாராக உள்ளன.அடுத்த 10 நாள்களில் அறுவடைப் பணிகள் தொடங்கும் என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.
இதையடுத்து ஆத்தூர், முன்னிலைக்கோட்டை, பஞ்சம்பட்டி, கலிக்கம்பட்டி, ஆரியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2ஆவது சாகுபடியை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் பழுத்து வீணாகும் வாழை

சென்னை உள்ளிட்ட வடமாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால், தேனி மாவட்டத்தில் விற்பனை வாய்ப்பின்றி 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான வாழைத்தார்கள் அறுவடை செய்யப்படாமல் மரத்திலேயே பழுத்து வீணாகி வருகின்றன.

தேனி மாவட்டத்தில் கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர், அல்லிநகரம், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி நடைபெற்று வருகிறது. திசு வாழை சாகுபடியை அரசு ஊக்குவித்து மானியம் வழங்குவதாலும், நல்ல மகசூல் மற்றும் விலை கிடைப்பதாலும், மாவட்டத்தில் ஜி-9 ரக திசுவாழை சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது.இதனால், தென்னை, கரும்பு மற்றும் நெல் சாகுபடியை கைவிட்டு, திசுவாழை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் திசுவாழை உற்பத்தி அதிக அளவில் இருந்ததால், விலை குறைந்து விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்தனர். கடந்த நவம்பர் மாதம் தொடங்கி, மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால்

வாழை விலை சரியத் தொடங்கியது. தேனி மாவட்டத்தில் உற்பத்தியாகும் வாழைக்காய்கள் அதிக அளவில் சென்னை சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்நிலையில், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால், வாழைக்கு விற்பனை வாய்ப்பு தடைபட்டுள்ளது.

20 நாள்களுக்கு முன் தேனியிலிருந்து சென்னை, கோயம்பேடு சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்ட வாழைக்காய்கள் கிட்டங்கிகளிலேயே தேங்கி வீணாகியுள்ளதாகவும், தொடர்ந்து வாழைக்காய்களை சந்தைக்கு அனுப்ப முடியாத நிலையில் உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

வாழைத்தார்களை கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயக்கம் காட்டி வருவதால், 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள வாழைத்தார்கள், பருவம் தவறி மரத்திலேயே பழுத்து உதிர்ந்து வீணாகி வருகின்றன. மேலும், 75 சதவீதத்துக்கும் மேல் முதிர்ந்த நிலையில் உள்ள வாழைகளை, குளிர்ப்பதனக் கிட்டங்கிகளில் வைத்து பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் உள்ளனர். திசு வாழை சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு ரூ. 1 லட்சத்துக்கும் மேல் உற்பத்திச் செலவு ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது ஒரு கிலோ வாழைக்காய் ரூ. 3-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர். இது குறித்து, தமிழ்நாடு வாழை விவசாயிகள் சங்கத் தலைவர் சின்னமனூரைச் சேர்ந்த ஏ.பி. கருப்பையா தெரிவிக்கையில், வாழை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு அரசு உரிய நிவாரணம் வழங்கவேண்டும். சாகுபடி செலவில் 50 சதவீதம் மானியம் வழங்க வேண்டும்.

வேளாண்மை விற்பனைத் துறை சார்பில் விதிக்கப்படும் செஸ் வரியை ரத்து செய்யவேண்டும். வாழையில் மதிப்புக் கூட்டுப் பொருள் தயாரிப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றார்.

**சிறுதானிய சாகுபடிக்கான செயல் விளக்கக் கூட்டம்**

சிறு தானியங்கள் சாகுபடி, சந்தைப்படுத்தல் குறித்த செயல் விளக்கக் கூட்டம் பெஜலட்டி கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோவை மத்திய வேளாண் ஆராய்ச்சி நிலைய மண்டலம், உதகை கீ ஸ்டோன் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய இக்கூட்டத்துக்கு, எஸ்.ஜே.க.அண்ணாமலை தலைமை வகித்தார். முதன்மை விஞ்ஞானி டான்.சி.பி.அம்ரோஸ் வரவேற்றார். மலைவாழ் விவசாயிகளின் சிறுதானிய சாகுபடி பாரம்பரிய முறைகளை எளிமை யாக்குவதற்கு உதவக்கூடிய விவசாயக் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. சிறுதானியங்கள் சாகுபடியில் உதவும் கருவிகளான சமப்படுத்தும் கருவி, உழிக் கலப்பை, வரப்பு இடும் கருவி, களை எடுக்கும் கருவி ஆகியவை மலைவாழ் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு அளிக்கப்பட்டன.

**தொடர் மழை: சின்ன வெங்காயம் சாகுபடி பாதிப்பு**

சத்தியமங்கலம் பகுதியில் பெய்த தொடர்மழையால் சின்ன வெங்காயம் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. சத்தியமங்கலம், நால்ரோடு, கெம்பநாயக்கன்பாளையம், சிக்கரம்பாளையம், பெரியூர், மாரனூர், தொட்டம்பாளையம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர் நடவு செய்யப்பட்ட நாளில் இருந்து 40 நாள்களாக இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்ததால் தோட்டத்தில் மழைநீர் தேங்கி வெங்காயப் பயிரில் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளது. இந்நோய் பாதிப்பில் இருந்து பயிரை காப்பாற்ற மருந்து தெளிக்கப்பட்டது. அறுவடைக்கு இன்னும் 30 நாள்கள் உள்ள நிலையில், மீண்டும் மழை பெய்தால் வெங்காயத்தின் பாதிப்பு ரூ. 10 லட்சத்தை தாண்டும் என அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து விவசாயி சுப்பையன் கூறுகையில், "கோவை, ஈரோடு, சேலம் மாவட்டத்திலேயே அதிக அளவில் சின்ன வெங்காயம் இப்பகுதியில்தான்

பயிரிடப்படுகிறது. இரவில் பனிப்பொழிவும் பகலில் வெயிலும் நிலவினால் ஏக்கருக்கு 8 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது அழுகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏக்கருக்கு 4 டன் மட்டுமே கிடைக்கும். ஏக்கருக்கு 400 கிலோ விதைக்காயை கிலோ ரூ.35 வீதம் வாங்கி நடவு செய்துள்ளோம். இதுதவிர, மருந்து தெளிப்பு மற்றும் அறுவடை போன்ற உற்பத்தி செலவுகள் உள்ள நிலையில் அறுவடையின் போது கிலோ ரூ.25-க்கு விற்கப்பட்டால் மட்டுமே விவசாயிகளை காப்பாற்ற முடியும்' என்றார்.

**மழைநீரில் மூழ்கிய 40 ஏக்கர் நெற்பயிர்: விவசாயிகள் சோகம்**

சேத்துப்பட்டு ஒன்றியத்தில் பயிரிடப்பட்ட சுமார் 40 ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

சேத்துப்பட்டை அடுத்த வடமாதிமங்கலம், ஆலம்பூண்டி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான சுமார் 40 ஏக்கர் நிலத்தில் கடந்த அக்டோபர் 2-ஆவது வாரத்தில் நெல் நடவு செய்தனர்.

இந்த நெற்பயிர் தற்போது வளர்ந்து அறுவடைக்கு தயாராக இந்த நிலையில், தொடர்ந்து பெய்த பருவமழையால் தண்ணீரில் மூழ்கியுள்ளது. மழைநீர் தேங்கி வடியாமல் நிற்பதால் நெற்பயிர் அழுகி வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து வடமாதிமங்கலம் விவசாயி கோட்டீஸ்வரன் கூறுகையில், பொன்னி நெல் நல்ல விலைபோகும் என பயிரிட்டோம். தற்போது மழைநீர் சூழ்ந்து பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே இப்பகுதியை அதிகாரிகள் பார்வையிட்டு, விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**மழையால் சேதமடைந்த பயிர்கள்: வேளாண் உதவி இயக்குநர் ஆய்வு**

கலசப்பாக்கம் தாலுகாவில் தொடர் மழையால் சேதமடைந்த விவசாயப் பயிர்களை வேளாண் உதவி இயக்குநர் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலசப்பாக்கம் தாலுகாவிலும் பெய்த தொடர்மழை காரணமாக செய்யாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் கலசப்பாக்கத்தை அடுத்த மேல்சோழங்குப்பத்தில் மிருகண்டா அணை முழுமையாக நிரம்பி உபரி நீர் ஏரிகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றுக்குச் சொந்தமான 75 சதவீதத்துக்கும் மேலான ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன.

இந்நிலையில், தொடர்ந்து பெய்த மழையால் விவசாயிகள் பயிர் செய்திருந்த பல இடங்களில் மணிலா, நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன. இதேபோல், கலசப்பாக்கம் தாலுகாவில் கிடாம்பாளையம், கேட்டவரம்பாளையம், சிறுவள்ளூர், எலத்தூர், வீரளூர், மேல்சோழங்குப்பம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட நெல், மணிலா பயிர்களை வேளாண் உதவி இயக்குநர் செ.சுந்தரம் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது, பல இடங்களில் நெற்பயிர்கள் உதிர்ந்து விழுந்து மீண்டும் முளைத்திருந்தது தெரியவந்தது. இந்த ஆய்வின்போது வேளாண் அலுவலர் ராமகிருஷ்ணன், துணை வேளாண் அலுவலர் சேகரன், உதவி வேளாண் அலுவலர்கள் வடிவேலு, சிவப்பிரகாசம் ஆகியோர் உடனிருந்தனர்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.65, சென்னையில் ரூ.3.85.

**ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பயிற்சி**

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தைச் சேர்ந்த பெரப்பன்சோலை கிராமத்தில் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது. பயிற்சியில் சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் கீதா கலந்து கொண்டு, நெல் பயிரில்

ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொடர்பான பயிற்சியை அப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கினார்.

இப் பயிற்சி முகாமில், புதூர் பாலப்பட்டி , பெரியகோம்பை மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த நாற்பது விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சி முகாமில் ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஓரப் பயிர் சாகுபடி, பூச்சி நோய் கண்காணிப்பு, தாவர பூச்சி கொல்லிகள் , நுண்ணுயிர் பூச்சிகொல்லிகள் ஆகியன குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

முன்னதாக, இப் பயிற்சி முகாமில் நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் நன்மை செய்யும் மற்றும் நெல் பயிரை தாக்கும் தீமை செய்யும் பூச்சிகள் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இப் பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர். பெரப்பன்சோலை முன்னோடி விவசாயி கோவிந்தசாமி நன்றி கூறினார்.

பருத்திப் பயிரைத் தாக்கும் வாடல் நோய்

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் வெள்ளக்கல்பட்டி, ஜேடர்பாளையம், தொப்பப்பட்டி, சீராப்பள்ளி, வடுகம் முனியப்பம்பாளையம் , சின்னக்காபாளையம் ஆகிய பகுதிகளில் பருத்தி பெருமளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, டீவு ரகப் பருத்தி ரகங்களே பெருமளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த இருபது நாள்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக ஆங்காங்கே பரவலாக பேரா வாடல் நோய் தாக்குதல் தென்படுகிறது. இந்த நோயின் தாக்குதலுக்கு முக்கியக் காரணம் தொடர் மழையால் தேவைக்கு அதிகமான தண்ணீர் பருத்திப் பயிர்களில் தேங்கிய காரணத்தால், பருத்தி பயிருக்குத் தேவையான மண்ணில் உள்ள பிராண வாயுவை கிரகிப்பதில் தடை ஏற்பட்டது. இதனால் ஆரம்ப கட்டத்தில் உள்ள பருத்திப் பயிர்கள் வாடிய நிலையில் தோன்றி, பின்னர் இலைகள் படிபடியாகக் காய்ந்து செடிகள் வாடிவிடும். பருத்திப் பயிரில் உள்ள சல்லி வேர்கள் பிராண

வாயுவினை கிரகித்துக் கொள்ளாத நிலையிலும், தண்ணீரை உறிஞ்சாத நிலையும் ஏற்படுகிறது.

இந் நோயினால் தாக்கப்பட்ட பருத்தி வயல்களில் உள்ள தண்ணீரை உடனடியாக வெளியேற்ற வேண்டும். சீரான நீர் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும். நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், பசுந்தாள் உரப் பயிர்களை இடையிடையே பயிர் சுழற்சியாகச் சாகுபடி செய்ய வேண்டும். அளவுக்கு அதிகமாக உரமிடுதலைத் தவிர்த்து செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். மேலும், நோய் தாக்கிய செடிகளிலிருந்து பிற செடிகளுக்கு இந் நோய் பரவாமல் தடுத்திட உயிர் பூசண கொல்லி மருந்தான டிரைக்கோ டெர்மா விரிடி என்ற மருந்தினை 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளைச் சுற்றி ஊற்ற வேண்டும் அல்லது தாமிர பூசண கொல்லி மருந்தான காப்பர் ஆக்சி குளோரைடை 2 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து பாதிக்கப்பட்ட செடியினை சுற்றி ஊற்றி, நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம்.

நோய் பாதிக்கப்பட்ட பருத்தி சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளான வெள்ளக்கல்பட்டி , ஜேடர்பாளையம், தொப்பப்பட்டி ஆகிய பகுதிகளை லத்துவாடி வேளாண் அறிவியல் நிலைய உழவியல் உதவிப் பேராசிரியர் டாக்டர் அழகுதுரை மற்றும் நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் பகுதி வேளாண்மை உதவி அலுவலர் கோவிந்தசாமி ஆகியோர் பார்வையிட்டு, ஆலோசனை வழங்கினர். முன்னதாக, ஜேடர்பாளையம் கிராமத்தில் விரிவாக்க அலுவலர், விஞ்ஞானி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

**தொடர் மழை: தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்க வேளாண் துறை யோசனை**

அரியலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையிலிருந்து தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்க மாவட்ட தோட்டக்கலைத் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதன்கிழமை அரியலூர் மாவட்ட தோட்டக்கலை துறை துணை இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் முந்திரி, காய்கறி பயிர்களான கத்தரி, மிளகாய், முருங்கை, கொடி வகை காய்கறிகள், மரவள்ளி, வாழை ஆகிய பயிர்கள் 32,000 ஹெக்டருக்கும் அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை வழக்கத்தைவிட அதிகமாக பதிவாகியுள்ளது. அதாவது அரியலூர் மாவட்டத்தில் சராசரி வடகிழக்குப் பருவமழை அளவு 485 மி.மீ., ஆகும். ஆனால் இதுவரை 569 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் பயிரிடப்பட்டுள்ள தோட்டக்கலைப் பயிர்கள் அதிக பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ளது. மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகள் கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்கலாம்.மழைநீர் தேங்கியுள்ள வயல்களிலிருந்து தண்ணீரை வெளியேற்றும் பொருட்டு நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்தி வயலில் உள்ள தண்ணீரை வெளியேற்றிவிட வழிவகை செய்ய வேண்டும். இலைவழி ஊட்டமாக 1 ஏக்கருக்கு 2 கிலோ யூரியா அல்லது பொட்டாசியம் நைட்ரேட்டும், 1 ஏக்கருக்கு 200 கிராம் நுண்ணூட்டக் கலவையான ரெக்சோலினும் கலந்து தெளிக்க வேண்டும்.

காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை 1 லிட்டருக்கு 3 கிராம் வீதத்தில் கலந்து கரைசல் நன்கு பயிர்களின் வேரில் படும்படி ஊற்ற வேண்டும். பூச்சி, நோய் தாக்குதலுக்கு தற்போது சாதகமான சூழ்நிலை நிலவி வருவதால் அன்றாடம் வயலினை ஆய்வு செய்து ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொண்டு தொடர் மழையிலிருந்து தங்கள் பயிர்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு தங்கள் வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.

**தொடர் மழையால் 331 ஹெக்டேர் நிலங்கள் பாதிப்பு**

தொடர்ந்து பெய்து வரும் மழையால் நீரில் மூழ்கிய நெற்பயிர்களின் பரப்பளவு வெள்ளிக்கிழமை 331 ஹெக்டேராக அதிகரித்தது.

மாவட்டத்தில் ஏறத்தாழ ஒரு வாரமாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல இடங்களில் சம்பா, தாளடி பருவ நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

மழை தொடர்வதால் மூழ்கிய பயிர்களின் பரப்பளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மாவட்டத்தில் வேளாண்மைத் துறையினர் வெள்ளிக்கிழமை எடுத்த கணக்கெடுப்பின்படி, ஒரத்தநாடு வட்டத்தில் 127 ஹெக்டேரிலும், கும்பகோணம் வட்டத்தில் 46 ஹெக்டேரிலும், திருப்பனந்தாள் வட்டத்தில் 38 ஹெக்டேரிலும், பாபநாசம் வட்டத்தில் 34 ஹெக்டேரிலும், திருவையாறு வட்டத்தில் 33 ஹெக்டேரிலும், அம்மாபேட்டை வட்டாரத்தில் 25 ஹெக்டேரிலும், தஞ்சாவூர் வட்டாரத்தி0ல் 13 ஹெக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 7 ஹெக்டேரிலும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 5 ஹெக்டேரிலும், பேராவூரணி வட்டாரத்தில் 3 ஹெக்டேரிலும் என மொத்தம் 331 ஹெக்டேரில் நெற்பயிர்கள் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், வியாழக்கிழமை இரவும், வெள்ளிக்கிழமை பகலிலும் பலத்தக் காற்றுடன் கூடிய மழை பெய்ததால் பல இடங்களில் வளர்ந்த நிலையில் உள்ள நெற்பயிர்கள் சாய்ந்துவிட்டன.

தவிர, ஒரத்தநாடு, திருவையாறு, திருவிடைமருதூர், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் சுமார் 65 ஹெக்டேரில் தொடர்ந்து பயிர்கள் தண்ணீரில் மூழ்கி இருந்ததால் அழுகி சேதமடைந்தன. மற்ற இடங்களிலும் பயிர் சேதம் குறித்து வேளாண்மைத் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொள்ளிடத்தில் கூடுதல் நீர்: மாவட்டத்தில் தொடர் மழையால் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் நீரோட்டம் அதிகரித்துள்ளது. எனவே, கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாயில் மட்டும் வினாடிக்கு 501 கனஅடி வீதம் மட்டும் திறந்துவிடப்படுகிறது. வெள்ள அபாயத்தைத் தவிர்ப்பதற்காக காவிரி, வெண்ணாற்றில் தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக கொள்ளிடத்தில் வினாடிக்கு 6,545 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. என்றாலும், காவிரி, வெண்ணாற்றில் மழை நீர் காரணமாக நீரோட்டம் பரவலாகக் காணப்படுகிறது.

**காய்கறி விலை வீழ்ச்சி**

புதுச்சேரியில் தொடர் மழை பெய்த போதிலும், காய்கறிகளின் விலை குறைந்து காணப்பட்டதால், பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றனர்.

புதுச்சேரியில் கடந்த ஒரு வாரமாக தொடர் கனமழை பெய்து வந்தது. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமடைந்தன. பெரிய மார்க்கெட், உழவர் சந்தை உள்ளிட்ட பகுதிகளிலும் மழை நீர் சூழ்ந்ததால் அவை கடந்த சில நாட்களாக வெறிச்சோடிக் காணப்பட்டன. இந்நிலையில் வெள்ளிக்கிழமை மழை குறைந்திருந்ததால் பெரிய மார்க்கெட், உழவர் சந்தை உள்ளிட்ட இடங்களில் காய்கறிகள் வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியது. ஆனால் விலை குறைவாக இருந்ததால் மகிழ்ச்சியடைந்த மக்கள், ஆர்வமுடன் காய்கறிகளை வாங்கிச் சென்றனர்.

பெரிய மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.15 முதல் ரூ.18 வரையும், வெங்காயம் ரூ.20 முதல் ரூ.30 வரையும் விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் கேரட் ரூ.45, பீன்ஸ் ரூ.50, பீட்ருட் ரூ.30, சவ்சவ் ரூ.25, முள்ளங்கி ரூ.35, கருணை கிழங்கு ரூ.35, உருளைக்கிழங்கு ரூ.16 - ரூ.25, வெண்டக்காய் ரூ.30, புடலங்காய் ரூ.50, கோஸ் ரூ.16, இஞ்சி ரூ.20 - ரூ.30, மிளகாய் ரூ.30 என விற்பனை செய்யப்பட்டது.

இதில் அதிகபட்சமாக நாட்டு கத்திரிக்காய் ரூ.100 முதல் ரூ.120-க்கும், வரி கத்திரிக்காய் ரூ.60 முதல் ரூ.80-க்கும் விற்பனை செய்யப்பட்டது. மேலும் பூக்களின் விலை கூட பெரிய அளவில் மாற்றமின்றி காணப்பட்டது. குறிப்பாக ஒரு கிலோ முள் அரும்பு, மல்லிகை தலா ரூ.400-க்கும், சாமந்தி ரூ.80-க்கும், ரோஜா ரூ.160-க்கும், அலரி ரூ.240-க்கும், சம்மங்கி ரூ.70-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தினகரன்

விழுப்புரம் மாவட்டத்தில் தொடரும் கனமழை

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் கனமழை மீண்டும் வலுப்பெற்றுள்ளது. பகலில் இடைவிடாமல் கொட்டித்தீர்த்த கனமழையினால் சாலைகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் 28ம் தேதி துவங்கியது. சுமார் ஒரு மாதமாக பெய்துவரும் கனமழையினால் சென்னை, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் ஏரி, குளங்கள் 70 சதவீதம் முழுவதுமாக நிரம்பிவழிகிறது. ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைகள் முழுகொள்ளளவை எட்டியதை தொடர்ந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

இதனிடையே தொடர்ந்து பெய்துவரும் கனமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. நேற்று முதல் மழை படிப்படியாக குறையக்கூடும் என்று வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படி காலை முதல் மழை இல்லாமல் சூரிய வெளிச்சத்துடன் காணப்பட்ட நிலையில் பிற்பகல் மீண்டும் கருமேகங்கள் கூடி கனமழை பெய்ய துவங்கியது. கனமழை வலுப்பெற்றுள்ளதால் சாலைகளில் வெள்ளநீர் கரைபுரண்டோடுகின்றன. மேலும் குடியிருப்புகளை சுற்றியும் வெள்ளம் சூழ்ந்து கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

**மழையால் அழுகிய காய்கறிகளை சாலையில் கொட்டிய அவலம்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த 10 நாட்களாக பெய்த தொடர் மழையினால் விவசாயிகள், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் காய்கறி வியாபாரம் செய்பவர்கள் பொதுமக்களின் நலன் கருதி மழைக்காலத்தை முன்னிட்டு முன்கூட்டியே வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு ஆகியவற்றை வாங்கி வைத்து இருந்தனர். ஆனால் தொடர் மழையால் பொதுமக்கள் காய்கறிகளை வாங்கி செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் காய்கறிகள் அழுகி வீணாகும் நிலை ஏற்பட்டது.

இதனால் நேற்று அழுகிய தக்காளி, முட்டைக்கோஸ், பச்சைமிளகாய், உருளைக்கிழங்கு, வெண்டைக்காய், கத்தரிக்காய் ஆகியவற்றை ஊழியர்கள் சேலம் நெடுஞ்சாலையில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டினர். இதுகுறித்து காய்கறி வியாபாரிகளிடம் கேட்டபோது தொடர் மழையினால் போதிய வியாபாரம் இல்லாததால் அனைத்து காய்கறி கடைகளிலும் இதுபோல் காய்கறிகள் அழுகி வீணானது. அதனால் தான் குப்பையில் கொட்டிவிட்டு செல்வதாக கூறினார். இது போல் உளுந்தூர்பேட்டையில் உள்ள 20க்கும் மேற்பட்ட காய்கறிக்கடைகளில் சுமார் ரூ. 1 லட்சம் மதிப்பிலான காய்கறிகள் அழுகி சேதமடைந்ததாக தெரிகிறது.

**நாகசமுத்திரக்கண்மாய் கரையில் உள்ள வயல்வெளியில் பெருகிக்கிடக்கும் சங்குப்பூச்சிகள் ரத்தக்காயமடையும் விவசாயிகள்**

திண்டுக்கல், : முத்தழகுபட்டி பகுதியில் சங்குப்பூச்சிகள் அதிகளவில் பெருகியுள்ளது. விளைநிலங்களில் விவசாயிகளின் கால்களை இவை பதம்பார்ப்பதால் அவர்கள் ரத்தக்காயமடைகின்றனர். இவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.திண்டுக்கல் முத்தழகுபட்டி பள்ளபட்டிக்கு இடையே நாகசமுத்திரக் கண்மாய் அமைந்துள்ளது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பயன்பெற்று வந்தன. வரத்துக்கால்வாய் ஆக்கிரமிப்பு, குறைவான நீர் போன்றவற்றால் பயன்பெறும் பகுதிகள் வெகுவாய் குறைந்து விட்டன. தற்போது இக்கண்மாய்க்கு மாநகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் கழிவுகள் வந்து கலக்கும் பகுதியாக மாறிவிட்டது. இருப்பினும் தற்போது பெய்த மழையினால் நீர் வெகுவாய் சேகரமாகியுள்ளது.

இந்தநீர் மூலம் கீரைகள், பசுந்தீவனங்கள் இப்பகுதியில் அதிகம் விளைவிக்கப்படுகின்றன. தற்போது மழைபெய்து போதிய நீரும் கையிருப்பில் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இருப்பினும் விளைநிலங்கள், கண்மாய்களில் படையெடுத்து வரும் சங்குப்பூச்சிகள் பெரும் இடையூறை ஏற்படுத்தி வருகிறது. பூச்சி என்று வழக்கில் கூறப்பட்டால் இது

மெல்லுடலி வகையைச் சேர்ந்த ஒரு உயிரியாகும். சிறிய வகை சங்கை புறஅடுக்காகக் கொண்டு இதனுள் இதன் மெல்லிய உடல் இருக்கும். தனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் உடன் உடலை பாதுகாப்பாக சங்கிற்குள் இழுத்துக் கொள்ளும். இந்த சங்குப்பூச்சிகள் கண்மாய் மட்டுமல்லாது, வயல்வெளிகள் என்று பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கில் சுற்றித்திரிந்து வருகிறது. சிலநேரங்களில் அருகில் உள்ள வீடுகளுக்குள் நுழைவது, தோட்டத்தில் உள்ள மரங்களில் ஏறுவது என்று பெரும் இடையூறை ஏற்படுத்தி வருகிறது.

வயல்வெளிகளில் உழவுப்பணிகளை மேற்கொள்ளும் போது விவசாயிகளின் காலில்பட்டு இந்த சங்குகள் உடைந்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தி விடுகின்றன.இதுகுறித்து நாகசமுத்திரம் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் நிக்கோலாஸ் கூறுகையில், கடந்த ஆண்டு ஒரு சில பூச்சிகள் மட்டுமே கண்ணில் பட்டன. ஆனால் தற்போது நூற்றுக்கணக்கில் பெருகிவிட்டன. இதனால் கண்மாய்கரை மட்டுமல்லாது, வயல்களிலும் காலை வைக்கவே பயமாக இருக்கிறது. இதனால் கோணிச்சாக்கில் இவற்றை எடுத்துப் போட்டு வேறு இடத்தில் கொட்டி வருகிறோம். விவசாயம் மற்றும் பூச்சியில்துறையினர் இது குறித்து ஆய்வு செய்து இவற்றை அகற்றி விவசாயிகளுக்கு உரிய முறையில் உதவ வேண்டும் என்றார்.

**ஆயக்குடி விவசாயிகளுக்காக பழச்சாறு ஆலை துவங்க வேண்டும்**

பழநி, : ஆயக்குடியில் பழச்சாறு ஆலை அமைக்க வேண்டுமென திமுக முன்னாள் எம்.எல்.ஏ அன்பழகன் கோரிக்கை விடுத்துள்ளார். பழநி அருகே ஆயக்குடியில் கொய்யா மற்றும் மா போன்ற தோட்டக்கலை பயிர்கள் அதிகளவு விளைவிக்கப்படுகின்றன. தமிழகத்தில் சேலத்திற்கு அடுத்தபடியாக ஆயக்குடி மா விற்கு அதிக மவுசு உள்ளது. இங்கு விளைவிக்கப்படும் மா வகைகள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. தவிர, பழச்சாறு ஆலைகளுக்கும் அதிகளவு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆயக்குடியில் குளிர்பதன கிட்டங்கி இல்லாததால் சீசன் நேரங்களில் இருப்பு வைக்க முடியாமல் மா விவசாயிகள்

தங்களது மா வகைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் போகிறது. வெளிமாநிலங்களில் உள்ள பழச்சாறு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும்போதும் விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை. இதனால், ஆயக்குடியில் குளிர்பதன கிட்டங்கி மற்றும் பழச்சாறு ஆலை அமைக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது தேர்தல் வாக்குறுதிகளில் குளிர்பதன கிடங்கு அமைத்து தருவதாக தேர்தலின்போது தெரிவிக்கின்றனர். ஆனால், இதுவரை அரசு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.எனவே, விவசாயிகள் நலன்கருதி இப்பகுதியில் குளிர்பதன கிட்டங்கி மற்றும் பழச்சாறு ஆலை அமைத்து தர வேண்டுமென முன்னாள் திமுக எம்.எல்.ஏ அன்பழகன் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.

**பல ஆண்டுகளுக்கு பின்பு கம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

செம்பட்டி, : மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கம்பு பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதன்மூலம் எதிர்பார்க்கும் லாபத்தை சுலபமாக பெறலாம் என்ற நிலை ஏற்பட்டிருந்தாலும் இதற்கான விதைகள் வேளாண்துறையினரால் வழங்கப்படாதது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர், ரெட்டியார்சத்திரம், பழநி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் நீர் ஆதார குறைவால் விவசாயிகள் கடந்த 10 வருடங்களாக கம்பு, கேழ் வரகு, சோளப்பயிர் பயிரிடுவதை குறைத்து வந்தனர். ஆனால் குறைந்த நீர் செலவில் பயரிடக்கூடிய பயிரான மக்காச்சோளத்தை அதிகளவில் பயிரிட்டு வந்தனர். தொடர்ந்து மக்காச்சோள பயிரை பயிரிட்டு வந்த நிலங்களில், தாமிரச் சத்து குறைவு ஏற்படுவதால், ஒருசில நிலங்களில் மக்காச் சோள பயிர் சரிவர விளையாமல் பாதியிலேயே கருகிவந்தன. தற்போது சின்னாளபட்டி அருகே முன்னிலைக்கோட்டை, என்.பஞ்சம்பட்டி, கலிக்கம்பட்டி, ஆரியநல்லூர்,

செட்டியபட்டி, வக்கம்பட்டி, பெருமாள்கோவில்பட்டி, வீரக்கல், வண்ணம்பட்டி உட்பட பல கிராமங்களில் விவசாயிகள் கம்பு பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோ -9, ஐ.சி.எம்.வி 221 ரக கம்பு பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். விதை நட்ட 75 வது நாளில் அறுவடை செய்யலாம் என்பதால், இப்பகுதியில் கம்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த பகுதிகளில் பயிரிடப்பட்ட கம்பு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. அறுவடை செய்யப்படும் கம்புகள், வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகிறது. 10 வருடங்களாக தமிழகத்தில் பல பகுதிகளில் குறைவாகப்பயிரிட்ட கம்பு பயிரின் தேவை அதிகரித்து வருகிறது. குழந்தைகளுக்கும், முதியோருக்கும் அதிக சத்து தரும் பயிர் என்பதால், பொதுமக்கள் இதை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து கம்பு விவசாயிகள் கூறுகையில், குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும் சத்து நிறைந்த உணவாக கம்பு பயிர் இருந்தும் சரிவர நீர் ஆதாரம் இல்லாததால், கம்பி பயிரிட ஆர்வம் குறைந்தது. இதில் மக்காச் சோள பயிர் விதைகள் மற்றும் இதர பயிர் விதைகளை கொடுக்கும் வேளாண்துறை அதிகாரிகள் கம்பு பயிர் விதை கொடுப்பதை தவிர்த்து வருகின்றனர். மேலும் கம்பு பயிர் பயிரிட்ட நிலங்களில் கம்பு பயிர் உண்பதற்காக குருவி, மைனா, காகம், புறா, போன்ற பறவைகள் வரும் போது, அவற்றின் எச்சங்கள் நிலத்திற்கு உரமாக இருந்து வந்தன. தற்போது பறவைகளின் வரத்து குறைவால், இயற்கை உரங்கள் நிலத்திற்கு கிடைப்பது குறைந்து செயற்கை உரங்களை நாங்கள் நிலத்திற்கு வாங்கி போட வேண்டிய அவல நிலையில் உள்ளோம், என்றார்கள்.

**உரியவிலை கிடைக்கும்வரை விளைபொருட்களை இருப்பு வைக்கும் வசதி**

திண்டுக்கல், : உரிய விலை கிடைக்கும் வரை விளைபொருட்களை வேளாண் விற்பனைக்கூட சேமிப்பு கிட்டங்கிகள் மற்றும் குளிர்பதன கிடங்குகளில் விவசாயிகள் இருப்பு வைத்துக்கொள்ளலாம் என்று வேளாண்வணிக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட வேளாண் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, கோபால்பட்டி, நத்தம் மற்றம் வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இங்கு 11 ஆயிரத்து 800 டன் விளைபொருட்களை சேமிக்கலாம். கடந்த ஆண்டில் 16 ஆயிரத்து 459 டன் விளைபொருட்களை விவசாயிகள், வியாபாரிகள் இருப்பு வைத்து பயன்பெற்றுள்ளனர். விளைபொருட்களின் இருப்பிற்கேற்ப அதன் மதிப்பில் 75 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் ஆண்டிற்கு 5 சதவீத வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்படும்.இருப்பு வைத்துள்ள விளைபொருட்களை வாங்கும் வியாபாரிகளும் விளைபொருட்களை இங்கேயே இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

இதேபோல் பழநி ஆயக்குடியில் கொய்யா மற்றும் பழங்கள் உற்பத்தியாளர்கள் கம்பெனியும், ஒட்டன்சத்திரத்தில் முருங்கை மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்கள் கம்பெனியும் அமைக்கப்பட்டு கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மாவட்டத்தில் சீரான மழை பெய்திருப்பதால் விவசாயப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பயிர் வரும் ஜனவரி, பிப்ரவரியில் அறுவடைக்கு வரும். அப்போது இந்த சேமிப்புக்கிட்டங்கி மற்றும் குளிர்பதன கிட்டங்கிகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக கிராமங்களில் அறுவடை பின்செய்நேர்த்தி, தரம்பிரித்தல், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி மேற்காணும் வசதியை பயன்படுத்திக்கொள்ளுமாறு வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் விவசாயிகளிடம் தெரிவித்துள்ளனர்.

### சாத்தான்குளம், பேய்க்குளம் பகுதியில் விவசாய பணிகள் தீவிரம்

சாத்தான்குளம், : சாத்தான்குளம், பேய்க்குளம் பகுதியில் பருவமழை மூலம் குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதையடுத்து விவசாயிகள் விவசாயப்பணிகளை துரிதப்படுத்தியுள்ளனர்.சாத்தான்குளம், பேய்க்குளம், பகுதி வானம் பார்த்த பூமி என்பதால் குளம் மற்றும் கிணற்று பாசனம் மூலமே விவசாயம் நடந்து வருகிறது. வடக்கிழக்கு பருவமழை மூலம் இப்பகுதியில் போதிய மழை இல்லையென்றாலும் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்துள்ள மழை காரணமாக பெரும்பாலான குளங்கள் நிரம்பியதுடன் கிணறுகளில் நீர்மட்டம்

உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் நன்செய் பயிர்களான நெல் மற்றும் நிலக்கடலை பயிரை பயிரிட்டுள்ளனர். நாற்று நல்ல முறையில் வளர்ந்து வருகிறது.

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழை இல்லாமல் இருந்ததில் கிணற்று நீரும் அடி மட்டத்துக்கு போனது. இந்நிலையில் கடந்த எதிர்பார்த்த மழை பெய்ததில் குளம் மற்றும் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து விவசாயத்துக்கு உதவியது. இந்த ஆண்டு அக்டோபர் மாத இறுதி வரை மழை பெய்யாமல் கடும் வெயில் அடித்து வந்ததால் மழை ஏமாற்றி விடும் என கவலை இருந்தது. நவம்பர் மாத தொடக்கத்தில் பெய்த மழை எங்களை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. ஆதலால் விவசாய பணிகளை தொடங்கியுள்ளோம். இந்த ஆண்டு போதிய மகசூல் கிடைக்கும் என நம்புகிறோம் என்றார்.

## 250 எக்டேர் நெற்பயிர் நீரில் மூழ்கின தஞ்சை மாவட்டத்தில்

தஞ்சை, தஞ்சை மாவட்டத்தில் 250 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது.தஞ்சை அருகே பாபநாசம் வட்ட பகுதிகளில் கலெக்டர் சுப்பையன் நேற்று மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டார். அப்போது குமுளக்குடி என்ற கிராமத்தில் புத்தாறு வடிகால் வாய்க்காலில் மண்டிக்கிடக்கும் ஆகாய தாமரையை அகற்ற உத்தரவிட்டார். அப்போது கலெக்டர் சுப்பையன் கூறியதாவது, தஞ்சை மாவட்டத்தில் மழையால் ஏரி, குளங்கள் நிரம்பி வருகிறது. இதையடுத்து அனைத்து வகையான தற்காப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீரில் மூழ்கியுள்ள பயிர்களை கணக்கெடுக்கும் பணி நடந்து வருகிறது.

இதுவரை சுமார் 250 எக்டேர் நீரில் மூழ்கியுள்ளது. இதில் 68 எக்டேரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. 777 குடிசை வீடுகள் பகுதியாகவும், 55 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளது. தொடர்ந்து சேதமான வீடுகள் கணக்கெடுக்கும் பணி நடந்து வருகிறது. இம்மழையால் இதுவரை 252 ஆடுகளும், 52 மாடுகளும் இறந்துள்ளன. 4 பேர் இறந்துள்ளனர். தாழ்வான

பகுதிகளில் வசிக்கும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கலெக்டர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. ஏதேனும் குறைபாடு இருந்தால் உடனடியாக 1077 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம். மாவட்ட அளவிலான அலுவலர்கள் தலைமையில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விஏஓவினர் உதவியாளர்கள் அவரவர் பகுதியிலேயே இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை மக்களுக்கு உணவுப் பொருட்கள் தஞ்சை மாவட்டத்திலிருந்து தரை மற்றும், வான் வழியாக கொண்டு செல்ல ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் யாரேனும் உதவி செய்ய முன் வந்தால் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 மூலம் தெரிவிக்கலாம் என்றார்.


**வரத்து அதிகம் வாழைத்தார் விலை வீழ்ச்சி**

கரூர்: கரூர் மாவட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வாழைத்தார்கள் விற்பனைக்காக கரூர் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. வாழைத்தார்கள் வழக்கத்தை விட அதிக அளவில் நேற்று வாழைக்காய் மண்டிக்கு வந்து குவிந்தது. ஆனால் உரிய விலை கிடைக்க வில்லை. பூவன்பழம் தார் ஒன்றுக்கு ரூ.300க்கு முன்பு ஏலம் போனது. நேற்று ரூ.100ஆக குறைந்து விட்டது. ரஸ்தாளி பழம் ரூ.200ல் இருந்து ரூ.150ஆக குறைந்தது. பச்சைநாடன் ரூ200ல் இருந்து ரூ.150ஆனது. மோரீஸ் ரூ.200ல் இருந்து ரூ100ஆக குறைந்தது. வாழைத்தார்கள் விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இது குறித்து வியாபாரிகள்கூறுகையில், மழைக்காலமாக இருப்பதால் வாழைப்பழங்களை குறைந்த அளவுக்குத்தான் மக்கள் வாங்குகிறார்கள். போதுமான விற்பனை இருக்காது என்பதால் வியாபாரிகள் ஏலம் கேட்க குறைந்த அளவே வந்திருந்தனர். அதனால் விலை குறைந்து விட்டது. வாழைக்காய் மண்டிக்கு வரத்து அதிகம் இருந்தும் போதுமான விலை கிடைக்காமல் போனது என்றனர்.விலை மலிவு காரணமாக சில்லரை விற்பனையிலும் பழம்விலை குறைந்தது. மோரீஸ் பழம் தார் ரூ.100

என்பதால் விலையும் குறைந்துள்ளது. தள்ளுவண்டிகளில் ஒருசீப் ரூ.10க்கு விற்பனை செய்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**தமிழகம், புதுச்சேரியில் 3 நாட்களுக்கு மழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு**




வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் 3 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் சென்னை உள்ளிட்ட வடகோடி மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை இல்லை என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில தினங்களாக பெய்த தொடர்மழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் பகுதிகள் பேரிடர் பகுதியாக அறிவிக்கும் நிலைக்கு சென்றது. சென்னை மாநகர் இதர பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டது.

இந்நிலையில், சென்னை உள்ளிட்ட வட கோடி மாவட்டங்களுக்கு கனமழை ஆபத்து நீங்கியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

இலங்கை மற்றும் வட தமிழகத்தை ஒட்டிய கடல் பகுதியில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. இதன் காரணமாக கடலோர தமிழகத்தின் அனேக இடங்களிலும், உள்தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக நாகை, கடலூரில் 9, புதுச்சேரியில் 8 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

தொடர்ந்து, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது. கனமழையை பொறுத்தவரை சென்னை உள்ளிட்ட வடகோடி மாவட்டங்களில் கனமழை அறிவிப்பு அல்லை. மத்திய மாவட்டங்களான விழுப்புரம் மற்றும் டெல்டா மாவட்டங்கள், கடலூர், புதுவை, காரைக்கால்லில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், தென் மாவட்டங்களான நெல்லை, கன்னியாகுமரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யலாம். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில புகுதிகளில் மழை பெய்யலாம். காற்றழுத்த தாழ்வுப்பகுதி நீடிப்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம். இவ்வாறு ரமணன் தெரிவித்தார்.

மீன்கள் ஏன் வடக்கு நோக்கிச் செல்கின்றன?



***உயிரினங்கள் இடம்பெயர்ந்து செல்லும் அளவுக்கு அவற்றின் பருவ நிலை மாற்றத்தின் தாக்கம் இருக்கிறது***

நமது மீன்கள் வடக்கு நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்றன. 1980-களின் மத்தியில் வரை, மெக்கெரெல் மற்றும் எண்ணெய் மத்தி போன்ற முக்கியமான மீன் வகைகள், கேரளாவின் மலபார் கடற்பகுதியில் இருந்தன. புவி வெப்பமயமாதல் காரணமாக, 1967 2007 காலகட்டத்தில் இந்தியாவின் மேற்குக் கடற் கரைப் பகுதியின் வெப்பநிலை 0.6 டிகிரி செல்ஷியஸ் உயர்ந்திருப்பதாக, பருவ நிலை மாற்றத்துக்கான கேரள மாநிலச் செயல் திட்டத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதன் விளைவாக, இந்த மீன்கள், உயிர் வாழ்வதற்கு வசதியான வாழ்விடத்தைத் தேடி கடலில் வடக்கு திசை நோக்கி நகரத் தொடங்கின. கடந்த 30 ஆண்டுகளில், வடக்கு திசையில் 650 கி.மீ. தொலைவுக்கும் அதிகமாக அம்மீன்களின் எல்லை விரிவடைந்திருக்கிறது. கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரத்தையும் தாண்டி இவை தற்போது குஜராத்தின் கடல்பகுதியில் காணப்படுகின்றன. இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இருந்தும், மெக்கெரல் மீன்கள் வடக்கு நோக்கிச் சென்றுவிட்டன. முன்பு ஆந்திரக் கடற்கரையோரம் இருந்த இந்த மீன்கள் தற்போது மேற்கு வங்கக் கடல் பகுதிக்குச் சென்று விட்டன.

**காரணம் என்ன?**

கடலில் மட்டுமல்ல, இந்தியாவின் நதிகளிலும் பல்வேறு மீன் இனங்களின் இடம்பெயர்வு நடந்திருக்கிறது. உதாரணத்துக்கு, கங்கை நதியில் இருந்து, மித வெப்ப நீர் மீன்களில் நான்கு இன மீன்கள், வட திசையில் ஹரித்வார் வரை சென்றுவிட்டன. இந்தப் பகுதியில் 1970-1986 காலகட்டத்தின் சராசரி வெப்ப நிலை, 2009-ம் ஆண்டுவாக்கில் 1.5 டிகிரி செல்ஷியஸ் உயர்ந்ததால் ஏற்பட்ட விளைவு இது.

புவி வெப்பமயமாதல் காரணமாக இந்தியாவின் ஒவ்வொரு நிலப் பகுதியிலும், சுற்றுச்சூழலிலும் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. வெப்பநிலை உயர்ந்து வருவது ஒரு முக்கியமான காரணம் என்றாலும், மழைப் பொழிவில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும் இதற்கு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. சில சமயங்களில், உணவுக்காகத் தாங்கள் சார்ந்திருக்கும் விலங்குகள் கிடைக்காமல்போவதால், மேலும் சில உயிரினங்கள் வேறு இடம் நோக்கிச் செல்லும் கட்டாயத்துக்கு ஆளா கின்றன. இந்தியாவுக்கு மட்டுமான நிலை அல்ல இது. உலக அளவில், தரையிலும் கடலிலும் வாழும் நூற்றுக் கணக்கான உயிரினங்கள் தொடர்பாகப் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் நடத்தப்படும் ஆய்வுகள் தெரிவிக்கும் தகவல் இது: “ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கடல்வாழ் உயிரினங்களில் மூன்றில் ஒரு பகுதி, துருவங்களின் திசையில் தங்கள் வாழ்விடத்தின் எல்லையை விரித்துக்கொண்டிருக்கின்றன. நிலப்பகுதியில் வசிப்பனவற்றில் பாதி உயிரினங்களும் இவ்வாறு இடம்பெயர்ந்திருக்கின்றன”.

**நகரும் மரங்கள்**

இந்திய இமய மலைப் பகுதி, கடந்த சில பத்தாண்டுகளாக சராசரியாக 1.5 டிகிரி செல்ஷியஸ் வெப்ப நிலை உயர்ந்திருப்பதால், தாழ்வான பகுதியில் வசிக்கும் பல உயிரினங்கள் கடுமையான வெப்பத்தை உணர்கின்றன. ‘ஹிமாச்சலி ஆப்பிள்’ எனும் புகழ் பெற்ற ஆப்பிள் வகை, குலு பள்ளத்தாக்கில் இப்போது செழித்து வளர்வதில்லை. உத்தர்காண்ட்டில் மட்டும் 1970-

களிலிருந்து, மரங்களின் அடுக்கு 1,000 அடிகளுக்கும் மேல் மலை மீது நகர்ந்திருக்கிறது. இமய மலையின் கிழக்குப் பகுதியில் பட்டாம்பூச்சிகள், பறவைகள், மான், தேனீக்கள், ஊர்வன போன்ற எண்ணற்ற உயிரினங்கள் உயரமான இடத்தை நோக்கி நகர்ந்துசென்றுவிட்டன. இதுபோல் 25 உயிரினங்கள் இடம்பெயர்ந்துவிட்டதாக சிக்கிமில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. புவிவெப்பமயமாதலின் மற்ற விளைவுகளாலும் இந்திய உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. அவை: வெப்ப அழுத்தம், கடல் அமில மயமாதல், பூச்சிகளின் தாக்கு தல் மற்றும் வறட்சி. எனினும், உயிரினங்களின் வாழ்க்கை சுழற்சியில் ஏற்பட்டிருக்கும் மாறுதல், இந்தப் பிரச்சி னையின் தாக்கத்தை, மற்ற எதையும் விட அழுத்தமாகச் சொல்கிறது.

அல்மோராவில் உள்ள ஜி.பி. பாண்ட் மையத்தில் உள்ள விஞ்ஞானிகள், ரோடோடென்ரான் (மலைப் பூவரசு) எனும் தாவரத்தின் மலர்ச்சிப் பருவம் தொடர்பாக 1893-ல் இருந்து எடுக்கப்பட்ட தரவுகளை ஆய்வு செய்தனர். இச்செடிகள் தற்போது 40 நாட்கள் முன்னதாகவே மலர்ந்துவிடுகின்றன என்பது ஆய்வில் தெரியவந்தது. இந்த மாற்றத்துக்கும் வெப்ப நிலை உயர்வுக்கும் தொடர்பு இருப்பதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இமய மலைப் பகுதியில் உள்ள பல உயிரினங்களும் இதே போன்ற பாதிப்பைச் சந்தித்திருக்கின்றன. கர்நாட காவின் கடற்கரை பகுதியில் உள்ள எனது கிராமத்தில் மாமரத்தின் மலர்ச்சி பருவம் இதேபோன்ற மாற்றத்துக் குட்பட்டிருப்பதை அறிய முடிகிறது. மணிப்பாலில் அத்தி, ஒடிஷாவில் சாரப் பருப்பு, கேரளாவில் காப்பிக்கொட்டை ஆகியவற்றிலும் இந்த மாற்றத்தை உணர முடிகிறது. சென்னை கடல் நீர் வெப்பமானதைத் தொடர்ந்து இரண்டு வகை மீன்கள், தாங்கள் முட்டையிடும் பருவத்தை அக்டோபர் மற்றும் மார்ச் மாதங்களுக்கு மாற்றிக் கொண்டுவிட்டன. மற்ற மாதங்கள் இன்னும் அதிகமாக வெப்பமடைந்திருக்கின்றன.

**அறுந்துபோகும் தொடர்பு**

வாழ்விடத்தை மாற்றிக்கொள்ளுதல் மற்றும் வளர்ச்சி சுழற்சிமுறையில் மாறுதல் போன்றவை பருவ நிலை மாற்றத்தின் காரணமாக அந்த உயிரினங்கள்

கைக்கொண்டிருக்கும் மாற்றங்கள். இந்த உயிரினங்க ளால் இதைச் சமாளிக்க முடியுமா, இல்லையா என்பது மட்டுமல்ல விஷயம். தாவரங்களின் சுழற்சி முறை மாறும்போது உணவுக்காக அவற்றை நம்பியிருக் கும் மற்ற உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. சில உயிரினங்கள் இவ்வாறு தங்கள் நிலையை மாற்றிக் கொள்ளும்போது உயிர்ச் சூழலில் உள்ள மற்ற உயிரினங்களும் இந்த மாற்றத்தில் இணைந்து கொள்வதில்லை. அத்துடன், பல்லாண்டுகளாகத் தொடரும் உயிரினங்களுக்கு இடையிலான தொடர்பு பாதிப்புக்குள்ளாகிறது. இயற்கையான தடைகளும் உண்டு. கடல் வெப்பம் அதிகரிக்கும் நிலையில், பாம்பே வாத்து என்றழைக்கப்படும் ஒரு வகை மீன் வடக்கில் எத்தனை தூரம் இடம்பெயர முடியும் என்று ஒரு நிபுணர் கேட்டார். ஏனெனில், இந்த மீன் வடக்கில் இடம்பெற முடியாத வகையில், குஜராத்தின் நிலப் பகுதிதான் அதன் வடக்கு எல்லையாக இருக்கிறது. ஐரோப்பாவில் புவி வெப்பமயமாதல் காரணமாக மலைப் பகுதிகளில் வாழும் தவளைகள் மற்றும் தேரைகள், மேலும் மேலே செல்ல வழியில்லாததால் அழிந்துபோன சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இந்தியாவில் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளும் இங்குள்ள உயிரினங்களின் அழிவு குறித்து பேசுகின்றன.

சுருக்கமாகச் சொல்வதானால், புவி வெப்பமயமாதல் தரும் இப்பிரச்சினை வெவ்வேறு வகைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது மட்டுமல்லாமல் மற்ற உயிரினங்களிடமும் பாதிப்பை ஏற்படுத்தும் சூழலில், உடனடியாகச் செயலாற்ற வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறது. ஏற்கெனவே, சராசரி வெப்ப நிலையில் 0.9 டிகிரி செல்ஷியஸ் உயர்ந்து வருவது உள்ளிட்ட அழிவுகள் சுற்றுச்சூழலில் ஏற்பட்டு வரும் நிலையில், வெப்பநிலை மேலும் உயர்வது இந்தியாவின் கணக்கற்ற உயிரினங்களில் ஏற்படும் பாதிப்பு குறித்த கவலையை ஏற்படுத்துகிறது.

மனிதர்களைப் பொறுத்தவரை, மற்ற உயிரினங்களின் வாழிடம் மற்றும் அவற்றின் நலனைச் சார்ந்துதான் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை இருக்கிறது. மற்ற உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளின் காரணமாக, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள், மீனவ மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் இன்னும் ஆழமான ஆய்வைக் கோருபவை. பருவநிலை மாறுதல்

தொடர் பாக டிசம்பர் மாதம் பாரிஸில் நடக்கவிருக்கும் சி.ஓ.பி.21 மாநாட்டில், புவிவெப்பமயமாதலின் தாக்கத்தைச் சந்திக்கும் உயிரினங்கள் சொல்லும் சேதிக்கு, அரசியல் தலைவர்கள் செவிமடுப்பார்கள் என்று நம்பலாம். ஏனெனில், வாழ்க்கை என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு வலைப் பின்னல். ஆபத்தில் இருக்கும் உயிரினங்கள் நமக்குச் சொல்லும் செய்தியை அலட்சியம் செய்வது ஆபத்தானது!

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தமிழகத்துக்கு நிவாரண நிதியாக ரூ.5 கோடி அனுப்பிய ஒடிசா**



தமிழகத்தில் பெய்த தொடர் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரண உதவியாக ஒடிசா மாநில அரசு ரூ.5 கோடியை வழங்கியுள்ளது.

தமிழக அரசுக்கு முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒடிசா அரசு ரூ.5 கோடியை அனுப்பியுள்ளதாக அம்மாநில நாடாளுமன்றத்தில் நேற்று

நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பி.கே. அருகா தெரிவித்தார். அதே சமயம், ஒடிசா பேரிடர் துரித மீட்புப் படையினர் (ODRAF) தமிழகத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட தயார் நிலையில் இருப்பதாகவும் சிறப்பு மீட்பு ஆணையர் பி.கே. மெஹபத்ரா தெரிவித்துள்ளார். தமிழக அரசிடம் இருந்து அழைப்பு வந்ததும், உடனடியாக தமிகத்துக்கு விரைய 5 குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தொடர்பு கொண்டு, தமிழகத்துக்குத் தேவையான உதவிகளை செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## 5 ஆயிரம் லிட்டர் பால், நூடுல்ஸ், பிஸ்கட் உட்பட 17 டன் உணவு பொருட்கள்: தமிழகத்திற்கு அனுப்பிய மத்திய அரசு



வரலாறு காணாத கனமழை காரணமாக வெள்ளத்தில் மிதக்கும் சென்னையின் நிவாரணப்பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, அமைச்சரவை செயலர் பி.கே சின்ஹா தலைமையிலான தேசிய நெருக்கடிநிலை மேலாண்மை குழு (NCMC) புது டெல்லியில் இன்று கூடியது.

இது குறித்து தேசிய நெருக்கடிநிலை மேலாண்மை குழு வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், “மாநில அரசின் அடிப்படைத் தேவையைக்

கருத்தில் கொண்டு 7 டன் பிஸ்கட்டுகள், 10 டன் நூடுல்ஸ்கள், 5 ஆயிரம் லிட்டர் பால், ஆகியவை சென்னை மாநகராட்சிக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, ஒரு லட்சம் குடிநீர் பாட்டில்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கூட்டத்தில் மேலும் 5 ராணுவக் குழுவினரை (ஒரு குழு = 75 ராணுவ வீரர்கள்) அனுப்பவும் முடிவு செய்யப்பப்பட்டுள்ளது.

தொலை தொடர்பு மற்றும் மின்சார வசதிகளை சீரமைப்பதில் இந்த வீரர்கள் முன்னுரிமை அளிப்பார்கள் என்றும் அமைச்சரவை செயலர் பி கே சின்ஹா தெரிவித்துள்ளார். மேலும் சென்னை விமான நிலையத்தை சீரமைப்பதற்கான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.